உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் வல்லமை ஊழியங்கள்

# பாதுகாப்பு 2



Compiled by
P. Isaac Chandran

உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.
சங்கீதம் 91:11

தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்.
சங்கீதம் 46:1

எனக்கு இரங்கும், தேவனே, எனக்கு இரங்கும், உம்மை என் ஆத்துமா அண்டிக்கொள்ளுகிறது, விக்கினங்கள் கடந்துபோகுமட்டும் உமது செட்டைகளின் நிழலிலே வந்து அடைவேன்.
சங்கீதம் 57:1

என் தேவனே, என் சத்துருக்களுக்கு என்னைத் தப்புவியும், என்மேல் எழும்புகிறவர்களுக்கு என்னை விலக்கி உயர்ந்த அடைக்கலத்திலே வையும்.
சங்கீதம் 59:1

நீர் எனக்கு அடைக்கலமும், சத்துருவுக்கு எதிரே பெலத்த துருகமுமாயிருந்தீர்.
சங்கீதம் 61:3

உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்.

நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்.

அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளைநோய்க்கும் தப்புவிப்பார்.
சங்கீதம் 91:1,2,3

உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.

உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டுபோவார்கள்.
சங்கீதம் 91:11,12

என் மறைவிடமும் என் கேடகமும் நீரே, உம்முடைய வசனத்துக்குக் காத்திருக்கிறேன்.
சங்கீதம் 119:114

கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார், அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்.

கர்த்தர் உன் போக்கையும் உன்வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார்
சங்கீதம் 121:7,8

நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும் நீர் என்னை உயிர்ப்பிப்பீர், என் சத்துருக்களின் கோபத்துக்கு விரோதமாக உமது கையை நீட்டுவீர், உமது வலதுகரம் என்னை இரட்சிக்கும்.
சங்கீதம் 138:7

கர்த்தாவே, துன்மார்க்கனுடைய கைகளுக்கு என்னை நீங்கலாக்கி, கொடியவனுக்கு என்னை விலக்கி இரட்சியும், அவர்கள் என் நடைகளைக் கவிழ்க்கப்பார்க்கிறார்கள்.
சங்கீதம் 140:4

நல்யோசனை உன்னைக் காப்பாற்றும், புத்தி உன்னைப் பாதுகாக்கும்.
நீதிமொழிகள் 2:11

ஞானத்தைச் சம்பாதி, புத்தியையும் சம்பாதி; என் வாயின் வார்த்தைகளை மறவாமலும் விட்டு விலகாமலும் இரு.

அதை விடாதே, அது உன்னைத் தற்காக்கும், அதின்மேல் பிரியமாயிரு, அது உன்னைக் காத்துக்கொள்ளும்.
நீதிமொழிகள் 4:5,6

கர்த்தரின் நாமம் பலத்த துருகம்: நீதிமான் அதற்குள் ஓடிச்சுகமாயிருப்பான்.
நீதிமொழிகள் 18:10

தீமைக்கு சரிக்கட்டுவேன் என்று சொல்லாதே: கர்த்தருக்குக் காத்திரு அவர் உன்னை இரட்சிப்பார்.
நீதிமொழிகள் 20:22

கர்த்தர் நல்லவர், இக்கட்டுநாளிலே அரணான கோட்டை. தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்.
நாகூம் 1:7

ஆம்! கர்த்தர் நம் வழிகளிலெல்லாம் நம்மைக் காக்கும்படி, நமக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுகிறார். அவர் நம்மை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார், அவர் நம் ஆத்துமாவைக் காப்பார்.

அவர் நம் போக்கையும் நம் வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார்

கர்த்தருடைய வாயின் வார்த்தைகளை மறவாமலும் விட்டு விலகாமலும் இருப்போம். அது நம்மை தற்காக்கும், அதின்மேல் பிரியமாயிருப்போம் அது நம்மைக் காத்துக்கொள்ளும்.

*******************